

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

நான்காம்பத்து

6-ஆம் திருமொழி - காசுங்கறையுடை

* காசும்கறையுடைக்கூறைக்கும் அங்கோர்கற்றைக்கும்
ஆசையினால் * அங்கவத்தப்பேரிடும் # ஆதர்காள்! *
கேசவன்பேரிட்டு நீங்கள் $ தேனித்திருமொனோ *
நாயகன்நாரணன் தம்அன்னைநரகம்புகாள். (1)

அங்கொருகூறை அரைக்குடுப்பதனாசையால் *
மங்கியமானிடசாதியின் பேரிடும்ஆதர்காள்! *
செங்கணெடுமால்! சிரீதரா! என்றுஅழைத்தக்கால் *
நங்கைகாள்! நாரணன் தம்அன்னைநரகம்புகாள். (2)

உச்சியில்எண்ணையும் சுட்டியும்வளையும்உகந்து *
எச்சம்பொலிந்தீர்காள்! என்செய்வான்பிறர்பேரிட்டீர்? *
பிச்சைபுக்காகிலும் எம்பிரான்திருநாமமே
நச்சுமின் * நாரணன் தம்அன்னைநரகம்புகாள். (3)

மானிடசாதியில்தோன்றிற்றுஓர் மாஇடசாதியை *
மானிடசாதியின்பேரிட்டால் மறுமைக்கில்லை *
வானுடைமாதவா! கோவிந்தா!என்றுஅழைத்தக்கால் *
நலமுடைநாரணன் தம்அன்னைநரகம்புகாள். (4)

மலமுடையூத்தையில்தோன்றிற்றுஓர் மலவூத்தையை *
மலமுடையூத்தையின்பேரிட்டால் மறுமைக்கில்லை *
குலமுடைக்கோவிந்தா! கோவிந்தா!என்றுஅழைத்தக்கால் *
நலமுடைநாரணன் தம்அன்னைநரகம்புகாள். (5)

நாடும்நகரும்அறிய மானிடப்பேரிட்டு *
கூடியழுங்கிக் குழியில்வீழ்ந்துவழுக்காதே *
சாடிறப்பாய்ந்ததலைவா! தாமோதரா! என்று
நாடுமின் * நாரணன் தம்அன்னைநரகம்புகாள். (6)

மண்ணில்பிறந்துமண்ணாகும் மானிடப்பேரிட்டு * அங்கு
எண்ணமொன்றெண்ணியிருக்கும் ஏழைமனிசர்காள்! *

கண்ணுக்கினிய கருமுகில்வண்ணன்நாமமே
நண்ணுமின் * நாரணன் தம்அன்னைநரகம்புகாள். (7)

நம்பிபிம்பியென்று நாட்டுமானிடப்பேரிட்டால் *
நம்பும்பிம்புமெல்லாம் நாலுநாளில்அழுங்கிப்போம் *
செம்பெருந்தாமரைக்கண்ணன் பேரிட்டழைத்தக்கால் *
நம்பிகாள்! நாரணன் தம்அன்னைநரகம்புகாள். (8)

ஊத்தைக்குழியில் அமுதம்பாய்வதுபோல் * உங்கள்
மூதிரப்பிள்ளையை என்முகில்வண்ணன்பேரிட்டு *
கோத்துக்குழைத்துக் குணாலமாடித்திரிமினோ *
நாத்தகுநாரணன் தம்அன்னைநரகம்புகாள். (9)

* சீரணிமால் திருநாமமேயிடத்தேற்றிய *
வீரணிதொல்புகழ் விட்டுசித்தன்விரித்த *
ஓரணியொண்தமிழ் ஒன்பதோடொன்றும்வல்லவர் *
பேரண்வைகுந்தத்தௌ எஉறும்பேணியிருப்பரே. (10)

அடிவரவு: காசும அங்கொரு உச்சி மானிடம் மலம் நாடு மாண் நம்பி ஊத்தைநீரணி தங்கை.